# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## Pr.O.P.No. 79/2019

சாட்சி : RW– 1
பெயர் : திரு. சுந்தர்ராஜன் தேதி : 27.08.2024

**குறுக்குவிசாரணை** :– (மனுதாரர் தரப்பில்)

மனுவில் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 96 சென்ட் காட்டப்பட்டடுள்ளது. ம.சா.ஆ.–1 உயில் படி மனுதாரருக்கு மொத்த சொத்தில் பாதி எழுதிக்கொடுத்துள்ளார்கள். மீதி பாதி சொத்து அந்த உயில்படி எனக்கு எழுதி வைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் முதல்மனைவி உயிருடன் இருந்த சமயத்தில் சட்டவிரோதமாக 2 வது திருமணம் செய்தகொண்டார் என்று சொன்னால் 2 மனைவிகளும் சகோதரிகள். அதனால்தான் என்தகப்பனாரின் 2 வது மனைவியான என்னுடைய தாயாருக்கு உயில்படி சொத்து எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் என் தகப்பனாருடன் வலசையூரில் தனியாக குடித்தனம் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. ஒரே குடும்பமாக இருந்து வந்தார்கள்.

என் தகப்பனாரின் முதல் மனைவிக்கம் 2 வது மனைவிக்கும் எந்தவிதமான உறவு முறையும் இல்லை என்றும், நான் வழக்கிற்காக அவர்கள் சகோதரிகள் என்று பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.–1 ன் படி மனுதாரருக்கு செக்குபந்தி போட்டு சொத்து எழுதிவைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ம.சா.ஆ.– 2 முதல் 4 வரையில் உள்ள கிரய ஆவணங்கள் மூலமாக யார் யாருக்கு எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியும். மனு அயிட்டம் 1, 2 சொத்துக்கள் என் தகப்பனார் சுய சம்பாத்திய சொத்து என்றால் ஆமாம். ம.சா.ஆ.– 2 முதல் 4 வரையிலான கிரய ஆவணங்கள் மனுதாரர்களிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மனு சொத்துக்களை ம.சா.ஆ.–1 உயில் மூலமாக என் தகப்பனார் மனுதாரருக்கு எழுதிவைத்து ம.சா.ஆ.–2 முதல் 4 வரையிலான அசல் கிரய ஆவங்களை மனுதாரர் வசம் ஒப்படைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. உயில் சொத்துக்களில் ஓட்டு வீடு உள்ளது. அவ்வாறு வீடு

எதுவுமில்லை என்றும் நான் பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மனு சொத்தில் என் தாயார் குடியிருந்து வரவில்லை என்றும், அவ்வாறு குடியிருந்து வருவது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் நான் இந்த மனுவில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என் தகப்பனார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான செலவுகளை நான்தான் செய்தேன். அதற்கான ரசீதுகளை நான் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மனுதாரர்தான் தகப்பனாரின் மருத்துவ செலவுகளை செய்தார் என்றும் அதனால்தான் ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் இறக்கும்வரை 10 ஆண்டுகள் மனுதாரர் உடன் தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. ஈமக்காரியங்களை என் தாயார் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மொத்த சொத்தில் சரிபாதியை என் தகப்பனார் எனக்கு எழுதி வைத்துள்ளதாக என் தகப்பனார் இறந்து 15 நாட்கள் கழித்து உறவினர்கள் பாலுசாமி, ராம்குமார், குடும்ப நண்பர் ஏழுமலை முன்னிலையில் என்னிடம் தெரிவித்தார்கள் என்றால் ஆமாம்.

உயிலில் சாட்சி கையெழுத்து போட்ட ஏழுமலை, ராம்குமார் எனக்கு நன்றாக தெரிந்தவர்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் சுயமாக சம்பாதித்த சொத்தை அவர் யாருக்குவேண்டுமானாலும் உயில் எழுதிவைக்க உரிமை உண்டு என்று சொன்னால் ஆமாம். உயில் எழுதிவைத்தது எனக்கு தெரியாது. உயில்படி பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய சென்றபொழுது வருவாய் துறையினர் கேட்டுக்கொண்டதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

உயில்படி மனுசொத்தை மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாயார் அனுபவம் செய்து வருகிறார். மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால்சரியல்ல.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.